பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 04 வியாழக்கிழமை (20 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 266

# வடக்கில் 4 நகரங்களை கைப்பற்ற நான்கு இராணுவ நடவடிக்கைகள்

## சில தினங்களில் ஆரம்பமாகுமாம்

கொழும்பு, ஆகஸ்ட் 20

யாழ். குடாநாடு உட்பட வடபகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நான்கு பிரதான நகரங்களை கைப்பற்றுவதற்காக நான்கு இராணுவ நடவடிக்கைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் உயர்பீடம் இத்தகவலை வெளியிட்டதாக "லங்காதீப" சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நான்கு இராணுவ நடவடிக்கைகளுக்குள் யாழ். குடாநாட்டின் மீதான நடவடிக்கையே முக்கியமானதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன ஆகியோர் தயாரித்த திட்டங்களே பெரும்பாலும் செயற்படுத்தப்படும் என்றும் —

இந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நேரம் இன்னமும் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு தேவையான துருப்புகள், உபகரணங்கள் ஆகியவற்றைத் தயார் செய்வது தொடர்பாக உயர்மட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு நடவடிக்கைக்கு 10 ஆயிரம் துருப்புக்கள்

கொழும்பு, ஆக. 20

வடக்கே புலிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்காக மொத்தம் 10 ஆயிரம் துருப்புக்களைக் கொண்ட — 10 அணிகள் — அங்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இராணுவத் தலைமையகத் தீர்மானப்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக "திவுமின" சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இராணுவத்தின் பலத்தை மேலும் அதிகரிப்பதற்காக இந்த மாதம் 3 ஆயிரம் சிப்பாய்களும் அடுத்த மாதம் மேலும் 3 ஆயிரம் சிப்பாய்களும் படைகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

உத்தேச தாக்குதல் திட்டம் குறித்து முப்படைத் தளபதிகளும், கூட்டுப்படைத் தளகர்த்தரும் வெளியிட்ட கருத்துக்கள் அச்செய்தியில் இடம் பெற்றுள்ளன;

புலிகளை வெல்லக்கூடிய தான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின்படி இராணுவம் செயற்படும் எனக் கூட்டுப்படை தளகர்த்தர் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

கொப்பேகடுவ, விமலரத்ன ஆகியோருக்கு ஈடாக யுத்தகளத்தில் திறமையைக் காட்டக் கூடிய தளபதிகள் ஏற்னவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய தளபதிகள் நியமனம்; அதிகாரிகளுக்கு அதிருப்தி!

கொழும்பு, ஆக. 20

அராலித்துறைக் கண்ணிவெடியில் உயிரிழந்த படைத் தளபதிகளின் இடங்களுக்கு சேவை நீடிப்பில் உள்ள தளபதிகளை நியமிப்பது கனிஷ்ட அதிகாரிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சேவை நீடிப்பில் உள்ளோரை இந்த தளபதிகளின் இடங்களுக்கு நியமிப்பது கனிஷ்ட அதிகாரிகளின் பதவி உயர்வுகளுக்கு குந்தகமாக இருக்கக் கூடாது என சில பாதுகாப்புப் படை அதிகாரிகள் உணர்வதாக ஆங்கில வார இதழ் ஒன்றில் 'யாழ்ப்பாணம் தாக்குதல் தொடரும்' என்ற தலைப்பில் வெளியான ஒரு செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைத் தளபதிகள் பலர் உயிரிழந்திருப்பதால் அவர்களின் இடங்களுக்கு நியமிக்கப்படும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்கப்படும் சாத்தியம் உருவாகியுள்ளதாகவும் —

படையினருக்கு பதவி உயர்வுகளும், போர் முனை நியமனங்களும் வழங்கப்படும் போது திறமைக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் —

கனிஷ்ட அதிகாரிகளின்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயம் மீதான தாக்குதல் ஒப்பந்த மீறலே!

## செஞ்சிலுவைச் சங்க அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஆக. 20

"யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் இராணுவத்தினர் நேற்று முன்தினம் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஓர் ஒப்பந்த மீறல் நடவடிக்கையாகும்"

யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரி திரு. சுவான் சூ புலிகளின் குரல் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் ஒப்பந்தத்தை மீறி விட்டனர் என்பதை தாம் ஒப்புக் கொள்வதாகவும் — அதுபற்றி ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு முறையிட்டதாகவும் திரு. சுவான் சூ தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதாக பாதுகாப்பு அமைச்சு தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

(இ-5)

# குடா நாட்டில் ஊரடங்கு இன்று காலை 7 மணி முதல்!

கொழும்பு, ஆக. 20

யாழ் குடா நாட்டில் இன்று காலை 7 மணி முதல் கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கூட்டுப்படைத் தலைமையகம் நேற்றிரவு இவ்வாறு அறிவித்தது.

யாழ். குடா நாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவகப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்காது என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## அரசுக்கு எதிராக

# பத்திரிகையாளர்கள் நேற்று போர்க்கோலம்

லண்டன், ஆக. 20

செய்தியாளர்கள் தாக்கப்படும் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பு நகரில் நூற்றுக் கணக்கான செய்தியாளர்கள் கூடி அரசுக்கு எதிராக பெரும் மறியற் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த காலங்களில் செய்தியாளர்கள் மீது நடத்தப்பட்ட சகல தாக்குதல் சம்பவங்களையும் கண்டித்தே மறியற் போராட்டம் நடத்தப்பட்டது.

"அரசின் காடைத்தனத்தைக் கண்டிக்கிறோம்", "செய்திச் சுதந்திரம் வேண்டும்" என்ற வாசகங்கள் உட்பட அரசுக்கு எதிரான சுலோக அட்டைகளுடன் சுமார் 300 செய்தியாளர்கள் திரண்டு மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு மரண ஊர்வலம் ஒன்றில் கலகம் வெடித்தபோது செய்தியாளர் ஒருவர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவம் —

அண்மையில் பிரபல கேலிச் சித்திரக் கலைஞர் ஒருவர் துப்பாக்கி நபர்களால் கடுமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கனத்தைக் கலவரங்களை விசாரிக்க ஆணைக்குழு!

## சிறிமாவோ கோரிக்கை

கொழும்பு, ஆக. 20

கனத்தைக் கலவரங்களை விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா கோரியிருக்கிறார்.

இத்தகவலை சிங்கள வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

அரசுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பை அரசு மூடி மறைக்கப் பார்க்கிறது அதற்காகத்தான் கனத்தையில் இரு தினங்கள் இடம் பெற்ற கலவரங்களை எதிர்க் கட்சிகள் தூண்டி விட்டதாக அரசு கூறமுற்படுகிறது.

அரசு கூறுவதை உண்மையா என்பதை அறியவேண்டுமானால் அரசு ஒரு விசாரணைக் குழுவை அமைத்துப் பார்க்கட்டும். — இப்படி திருமதி பண்டார நாயக்கா மேலும் தெரிவித்தார்.

(உ-10)

# யுத்தத்துக்கு 4 ஆண்டுகளில் 6,348 கோடி ரூபா செலவு

கொழும்பு, ஆக. 20

வடக்கு — கிழக்கு யுத்தத்துக்கு அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் 6 ஆயிரத்து 348 கோடி ரூபாவை செலவு செய்துள்ளது.

யுத்தத்துக்கு செலவிடும் இத்தொகை பிரதிபலனற்றது: இது விழலுக்கு இறைத்த நீர்.

— இப்படிக் கூறினார் கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ஜயதேவ உயங்கொட:

1988 ஆம் ஆண்டு 819 கோடி ரூபாவும், 1989 ஆம் ஆண்டு 844.5 கோடி ரூபாவும், 1990 இல் 1396.5 கோடி ரூபாவும், 1991 ஆம் ஆண்டு 1694.3 கோடி ரூபாவும் இந்த யுத்தத்துக்குச் செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1992 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1596 கோடி ரூபா யுத்தத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காடு நகரமானால் நாடு நரகமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளுக்கு பாண் எடுத்து சென்று நேரடியாக விநியோகிக்கத் தடை

யாழ்ப்பாணம், ஆக 19

சுகாதார விதி முறைக்கேற்ப மூடப்பட்ட பெட்டிகளிலேயே பாண் விநியோகம் செய்யப்பட வேண்டும். கடைகளிலும் மூடப்பட்ட பெட்டிகளிலேயே பாண் வைக்கப்பட வேண்டும். இவற்றை உறுதி செய்யுமுகமாக, தனிப்பட்ட ரீதியாக பாணை வீடுகளுக்கு நேரடியாக எடுத்துச் சென்று விநியோகிப்பதோ அல்லது வியாபாரிகள் மூலமாக பாணை விநியோகிப்பதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளது யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

சகல பாண் உற்பத்தியாளர்களும் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பிரஸ்தாப கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு கடந்த 17 ஆம் திகதி நடந்த யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க நிர்வாக சபையால் உறுதி செய்யப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

★ தேசிய இறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகவும். பாணின் போஷாக்கினை அதிகரிக்கும் நோக்குடனும், ஒரு மூடை மாவுக்கு அரைக் கிலோ குரக்கன் மா எனும் விகிதத்தில் கலந்து பாண் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

★ 350 கிராம் தரமான பாணின் சில்லறை விலை ரூபா 7.50 ஆகும்.

★ பாண் உற்பத்தியாளர் விவரம், பாணின் நிறை, விலை, ஆகியவற்றைக் கொண்ட யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க அறிவித்தல், பேக்கரி, விநியோக வண்டிகள், விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும். இதன் மூலம் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்க முடியும்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க கண்காணிப்புக் குழு இம்முடிவுகளை அமுல் நடத்தி கண்காணிக்கும் என்றும் மீறுவோர் மீதான நடவடிக்கைக்கு காவற்றுறையினரின் ஒத்துழைப்பைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. [இ]

## கப்பலில் எடுத்து வரப்பட்ட தேங்காய் எண்ணெய்க்கு விலை நிர்ணயிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 20

'குமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட உள்ளது.

அதன் பின்னரே மக்களுக்கு அது விநியோகிக்கப்படும்.

யாழ். அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குமாரி கப்பலில் 178 பரல் தேங்காய் எண்ணெய் எடுத்து வரப் பட்டிருப்பது தெரிந்ததே. (இ-5)

## சர்வகட்சி மாநாடு குறித்து பிரதமரிடம் கேள்விக்கணை

சர்வகட்சி மாநாடு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அது 81 தடவைகள் கூடி சுமார் 134 மணிநேரம் ஆலோசனை நடத்தியுள்ளது. 18 லட்சத்து 40 ஆயிரம் ரூபா அதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. இவற்றால் கண்ட பலன் என்ன?

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பிரதமரிடம் இவற்றையெல்லாம் கேட்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஓ-5)

## செய்தியாளர்கள் கிளர்ச்சி ஒரு மகத்தான விழிப்புணர்வு

### பிரபல பத்திரிகையாளர் கருத்து

''இருபது ஆண்டுகளாக கருத்து சுதந்திரத்திற்கு விதிக்கப்பட்ட தடை, அவசரகாலச் சட்டம், செய்தித் தடை என பல்வேறு விதமாக அளவற்ற அமுக்கங்களுக்கு வளைந்து கொடுத்து வந்த செய்தியாளர்கள், வளைந்தது போதும் இனி பொறுக்க முடியாது என்ற நிலையில் கிளர்ந்து எழுந்திருக்கிறார்கள். இதுவே ஒரு மகத்தான விழிப்புணர்வு''

—''சண்டே ஐலண்ட்'' வார ஏட்டின் பதிப்பாசிரியர் காமினி வீரக்கோன் நேற்று பத்திரிகையாளர்கள் நடத்திய மறியற் போராட்டம் பற்றி இவ்வாறு கருத்து வெளியிட்டார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது. (உ-5)


ஆண்டு - 5

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

20 - 08 - 92

காலை 8.00 மணி அல்லது பி. ப. 2-30 மணி

இரு நேரங்களில் நடாத்தப்படும்.

BOND Institutes

யாழ்ப்பாணம்.

[இ/3155]


## உற்சவங்கள்

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராசப் பெருமான் கோவிலின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். [த-28-99]

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் கோவிலின் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும். [த]


## சங்கிலி யாருடையது?

ஆரியகுளம் சந்திப் பகுதியில் தவறவிடப்பட்ட தங்கச் சங்கிலி ஒன்று சி. நாகராஜா என்பவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி கீழ்க் காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. நாகராஜா

இல 95, முகலாம் குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம்.

[22239]


## உப ஜனாதிபதியாக நாராயணன்

இந்தியாவின் புதிய உப ஜனாதிபதியாக திரு. கே. ஆர். நாராயணன் தெரிவு செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த 768 எம்பிக்களில் 711 பேர் நேற்று நடந்த உப ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர். 10 எம்.பிக்களின் வாக்குகள் செல்லாதவை என்று தேர்தல் அதிகாரியால் நிராகரிக்கப்பட்டது.

பிரதான அரசியல் கட்சிகள் திரு. நாராயணனை ஆதரித்தன. சுயேச்சை வேட்பாளராக திரு. ஜோகிந்தர் சிங் உப ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

## சிறுகதை தொகுதி வெளியிட முடிவு

சமகாலப் போராட்ட இலக்கியங்களுக்கு களமமைத்துக் கொடுக்கும் முகமாகவும், புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் முகமாகவும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிக் கோட்டத்தினர் சிறுகதைத் தொகுதி ஒன்றினை வெளியிட முடிவு செய்துள்ளனர்.

இச் சிறுகதைத் தொகுதிக்கான ஆக்கங்கள் வடமராட்சியிலுள்ள சிறுகதை எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

சமகால நிகழ்வுகளை கருப்பொருளாகக் கொண்டு எழுதப்படும் சிறுகதைகளை இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் கலை, பண்பாண்பாட்டுக் கழகம், வடமராட்சி, வதிரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## மாணவர்களுக்கு கண்பரிசோதனை

தென்மராட்சியில் உள்ள பாடசாலைகளில் விரைவில் மாணவர்களுக்கு கண் பரிசோதனைகள் நடைபெறவுள்ளன.

பார்வை குறைந்த மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கண்ணாடிகளை வழங்குவதற்கு முன்னேற்பாடாக இந்த பரிசோதனைகள் நடைபெறவுள்ளன.

பாடசாலைகள் ஆரம்பமானதும் இந் நடவடிக்கை ஆரம்பமாகும். [ஓ-31]

## தடுப்பூசி

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் கடந்த பத்தாம் திகதி முதல் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம்—

இன்று — கெருடாவில் சனசமூக நிலையம்.

நாளை — அரசடி சனசமூக நிலையம்.

22ஆம் திகதி — கச்சாய் வீதி றோமன் கத்தோலிக்க பாடசாலை.

24ஆம் திகதி — விடத்தற்பளை சனசமூக நிலையம்.

25ஆம் திகதி — மிருசுவில் தெற்கு சனசமூக நிலையம்.

ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படும் என்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

## புதிய தளபதிகள்.!

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பதவி உயர்வுகளைப் பாதிக்காது அனுபவமுள்ள அதிகாரிகளின் சேவை பெறப்பட வேண்டும் என்றும் —

சில அதிகாரிகள் தெரிவித்ததாக [illegible] ஜோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-5]


நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு

## உதயன் ஆதரவுடன் இந்து சமயப் பேரவை நடத்தும் சைவசமய வினா-விடைப் போட்டி

இளவயதினர் மத்தியில் சமய அறிவைப் பெருக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இப்போட்டியில் 16 வயதுக்கு உட்பட்ட சகலரும் பங்குபற்றலாம். (மாணவர்கள் பாடசாலை அதிபர் மூலமும் ஏனையோர் தங்கள் பகுதிக் கிராம சேவகர் மூலமும் வயதினை உறுதிப்படுத்த வேண்டும்.)

கீழே உள்ள வினாப் படிவத்தை நிரப்பி இம் மாதம் 21ஆம் திகதிக்குப் பிந்தாமல் நல்லை ஆதீனத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும்; குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தபால் மூலம் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

போட்டியில் சிறப்பாகத் தேறும் மூவருக்குப் பெறுமதி மிக்கப் பரிசில்களும், மற்றும் ஐவருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

பரிசளிப்பு நல்லூர் தேர்த்திருவிழாவன்று (26-08-1992) நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

### வினாப் படிவம்

1. வேதநாயகனே போற்றி என்ற பாடல் எந்த நூலில் உள்ளது? அல்லது யாரால் பாடப்பட்டது என்பதை எழுதுக. ..........
2. இந்துசமயத்திற்கும் சைவசமயத்திற்கும் உள்ள வேறுபாடு யாது? ..........
3. தமிழீழத்திலுள்ள முருகன் கோவில்கள் ஐந்தின் பெயர் எழுதுக. ..........
4. வாய்கட்டிப் பூஜை செய்யும் மூன்று கோவில்களின் பெயர் தருக. ..........
5. முருகனைக் குறிப்பிடும் தமிழ் மந்திரம் யாது? வடமொழி மந்திரம் யாது? ..........
6. நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் சிறப்புகள் இரண்டு எழுதுக. ..........
7. நித்திய பூசையே பெருவிழாப் போல நடைபெறும் கோவில் யாது? ..........
8. நல்லூரின் வருடாந்த உற்சவம் ஆண்டுதோறும் எப்போது நடைபெறுகிறது? ..........
9. நல்லைக் கந்தனுக்கு வேறு பெயர் யாது? ..........
10. நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானத்தின் பெயரைப் பூரணமாக எழுதுக. ..........
11. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் யாரால் கட்டப்பட்டது? ..........
12. பஞ்சரதம் ஓடும் கோவில்கள் எவை? ..........
13. பெண்கள் தேர் இழுக்கும் கோவில்கள் எவை? ..........
14. குமாரபுரம் எங்குள்ளது? .......... அங்கிருந்த பழைய விக்கிரகங்கள் இன்று எங்கிருக்கின்றன? ..........
15. வண்ணார்பண்ணையிலுள்ள பெருமாள் கோயில் யாரால் கட்டப் பெற்றது? ..........
16. எங்கள் நாட்டில் வாழ்ந்த ஞானியர் பரம்பரையைக் குறிப்பிடுக. ..........
17. சுப்பிரமணிய பாரதியாரின் ஞான குருவாக விளங்கியவர் யார்? ..........
18. சுவாமி முத்திபானந்தரின் மறு பெயர் யாது? ..........
19. கடையிற்சுவாமிகளின் குரு யார்? ..........
20. யோகர் சுவாமிகளின் அயல்நாட்டுச் சீடர்கள் மூவரின் பெயரைக் குறிப்பிடுக. ..........
21. கடையிற் சுவாமிகள் இந்த நாட்டிற்கு வருவதற்கு முக்கிய காரணராக இருந்தவர் யார்? ..........
22. நல்லூர்த் தேரடிக்குச் சமீபமாக உள்ள சமாதி யாருடையது? ..........
23. அருணகிரிநாதர் அருளிய நூல்கள் எவை? ..........
24. இந்து சமயப் பேரவையின் தலைமைக்காரியாலயம் எங்குள்ளது? ..........
25. இந்துசமயப் பேரவையால் நடாத்தப்பெறும் சைவச் சிறார் இல்லம் எங்குள்ளது? ..........

பெயர்:

விலாசம்:

வயது:

விண்ணப்பதாரர் 16 வயதுக்கு உட்பட்டவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

இவரது பிறந்த திகதி:

பாடசாலை அதிபர் / கிராம சேவை அலுவலர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுப்பு:

# கிளிநொச்சி ஆஸ்பத்திரிகளில் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு

## நோயாளர்கள் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 20

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால் அங்கு நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.

பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காததால், வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்ட மருந்து வகைகள் மீண்டும் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்ட மருந்துவகைகளுக்கு வவுனியாவில் அனுமதி மறுக்கப்பட்டது குறித்து வைத்திய வட்டாரங்களில் அதிர்ச்சி வெளியிடப்பட்டது.

மருந்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலைமையை விளக்கி — பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று — மருந்து வகைகளை எடுத்து வர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

இதற்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருந்து ஒருவர் கொழும்புக்குச் சென்றுள்ளதாகவும் அறிய வருகிறது. (ஒ-ரி)

# ஒலிம்பிக்கில் இலங்கையர் 'கூச்சலில்' பதக்கம் பெறுவர்!

## அமைச்சர் ரணசிங்க கிண்டல்

இலங்கை மக்களுக்கு ஒரு விடயத்தில் மிகத் திறமை உண்டு. அதுதான் கூச்சலிடுவது.

தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்கா இப்படிக் கூறியிருக்கிறார்.

'அடுத்த ஒலிம்பிக்போட்டிகளின் போது "கூச்சலிடும்" போட்டி" ஒன்று இடம்பெற்றால் நிச்சயமாக இலங்கை தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைத் தட்டிக் கொண்டு வந்து விடும்' என்றார் அமைச்சர்.

வாதுவை கல்பிட்டியவில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார். (ஒ-5)

## மாணவர்களுக்கு இலவச சீருடை; வடக்கு - கிழக்கை புறக்கணியோம்

### அமைச்சர் சுனித்திரா தகவல்

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தில் வடக்கு — கிழக்கைப் புறக்கணிக்கமாட்டோம்.

கல்விச் சேவைகள் அமைச்சர் திருமதி சுனித்திரா ரணசிங்கா கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கும் ஏககாலத்தில் இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடை ஆகியன அனுப்பி வைக்கப்படும். அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதியிலிருந்து இலவச சீருடை விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்றும் — அன்றைய தினமே வடக்கு — கிழக்கு மாகாணங்களிலும் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் — என்றும் திருமதி ரணசிங்க கூறினார். (ஒ 5)

## லலித் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி

கொழும்பு, ஆக. 20

சுதந்திரக்கட்சி எம். பி திரு. கி. விஜயரத்னாவுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தாக்கல் செய்திருந்த 50 லட்சம் ரூபா மானநட்டஈடு கோரும் வழக்கை செலவு தொகையுடன் கல்கிசை மாவட்ட நீதிபதி கொலின் அமரசிங்கா தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

1988 செப்டம்பரில் இரத்தினபுரி மாவட்டம்-எஹலியகொடையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அவதூறு ஏற்படுத்தும் வகையில் பேசியதாக திரு. குணரத்னா மீது இவ்வழக்கை திரு. அத்துலத்முதலி தாக்கல் செய்திருந்தார். (ஒ-எ)

## பன்னல இராணுவ முகாம் தாக்கு:

# முன்னாள் சிப்பாய் ஒருவர் பொலீஸாரால் கைது!

கொழும்பு, ஆக. 20

பன்னல இராணுவ முகாம் மீது ஜே.வி.பியினர் நடத்திய தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் இராணுவத்தின் முன்னாள் சிப்பாய் ஒருவர் ஹபராதுவைப் பொலீஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

தாக்குதல் நடந்த சமயம் பன்னல இராணுவ முகாமில் இருந்து கொள்ளையிடப்பட்ட பெருந்தொகை ஆயுதங்களில் சிலவற்றை மீட்க முன்னாள் சிப்பாயின் கைது உதவும் என்று பொலீஸார் நம்புகின்றனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட முன்னாள் சிப்பாய் இராணுவத்தில் பணி புரிந்து வந்தார் என்றும் — அதன் பின்னரே அவர் இராணுவத்தை விட்டு விலகி ஜே.வி.பியில் சேர்ந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளையிடப்பட்ட ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடத்தை சந்தேகநபர் பொலீஸாரிடம் கூறியிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

## நீர்கொழும்பில் தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, ஆக. 20

நீர்கொழும்பில் உள்ள வீடு ஒன்றில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு இராணுவப் பிரிவுத் தலைவரின் சகோதரரே அவர் எனப் பொலீஸார் கூறுகின்றனர். (ஒ-5)

# இலவச சீருடை திட்டம் 'தேர்தல் குண்டு' அல்ல!

## இப்படிக் கூறுகிறார் ஹமீத்

கொழும்பு, ஆக. 20

"பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் திட்டம் ஓர் தேர்தல் குண்டு அல்ல"

இப்படிக் கூறியுள்ளார் நீதி உயர்கல்வி அமைச்சர் ஹமீத்.

இலவச சீருடைத் திட்டம் அரசாங்கத்தின் தேர்தல் குண்டு என எதிர்க்கட்சியினர் குறை கூறி வருகின்றனர்.

தேர்தலுக்கு இன்னும் பல வருடங்கள் இருக்கின்றன. பாமர மக்களுக்கு நன்மை அளிக்கும் இந்தத் திட்டத்தை அரசியல் ரீதியில் நோக்காமல், பொருளாதார கல்வி ரீதியில் இதனை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்— இப்படி அவர் மேலும் தெரிவித்தார்— [ஒ-5]

## அடிக்கல் நாட்டு வைபவம்

சங்கத்தானை, ஆக. 20

உள்ளூர் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி வியோ கழகத்தால் நிர்மாணிக்கப்பட உள்ள புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். [த-140]


நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 93**

பிரயோக கணிதம்

எறியம்

ஆரம்பம்:

22-08-92

சனி மாலை 4 30

ஆசிரியர்:

திரு. கமலசிங்கம்

[இ-3154]


## ஆயுத விற்பனையில் ஆஸி. பிரஜைக்கு தொடர்பா?

அண்மையில் காலி உனவட்டுனை பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து கஞ்சா, அபின் மற்றும் ஹெரோயின் போன்ற போதைப் பொருள்களுடன் கைதான ஆஸ்திரேலிய பிரஜை ஒருவர் ஆயுத விற்பனையிலும் ஈடுபட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நபருக்கும், வசதி படைத்தவர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த 13 வருடங்களாக இலங்கை வந்து போகும் இவர் தான் வசித்து வந்த வீட்டைச் சுற்றி கோட்டை போன்று 10 அடி உயரத்திற்கு மதிற் சுவர் அமைத்திருந்தாராம். [ஒ-5]


அறிவித்தல்

கேட்டு வாங்குங்கள் காற்றூட்டப்பட்ட

**புத்தூக்கி - REFRESHER**

குளிர்பானங்கள்

19 - 08 - 1992 முதல் எமது குளிர்பான விநியோக முகவர்களாக, யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு

"இனிமை மென்பான விநியோகஸ்தர்"

என்னும் ஸ்தாபன பெயருக்கு

திருமதி ரஜனி பாலச்சந்திரன், திருமதி ரஜனி மாலா இரவீந்திரநாயகம் என்பவர்கள் இணைந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் "இனிமை" விநியோகஸ்தரை நாடவும்.

ஏற்கனவே எமது விநியோக ஊழியர் மூலம் கடன் கொள்வனவு செய்த வர்த்தக நிலையங்கள் புதிய விநியோகஸ்தருடன் வரும் எமது ஊழியரிடம் நிலுவைகளையும், பெட்டி போத்தல்களையும் வழங்கி உதவுமாறு கேட்கின்றோம்.

ஆதரவுக்கு நன்றி

குளிர்பான விலை மாற்றம் (19 — 08 — 1992 முதல்)

| | விநியோகஸ்தர் விலை | சில்லறை விற்பனையாளர் விலை |
|---|---|---|
| 300 மி. லீற்றர் | 9 — 00 | 10 — 50 |
| 400 மி. லீற்றர் | 11 — 00 | 12 — 50 |

பொது முகாமையாளர்,

யாழ். பகுதி தெங்கு ப. பொ. கூ. சங்கங்களின் சமாசம்,

யாழ்ப்பாணம்.

[22210]



வளர்ந்தோருக்கான ஆங்கிலக் கல்வி

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

பாடசாலைகளைவிட்டு விலகிய மாணவர்களுக்கான வார இறுதி ஆங்கில வகுப்பு ஆரம்பமாக இருக்கின்றது. இப் பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோர் 22-08-1992 சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பாடசாலையில் தங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

(22229) — அதிபர்.



60 ஆம் நாள் நினைவு தினமும் அந்தியேட்டிக்கிரியை அறிவித்தலும்

அமரர்

கந்தையா நல்லையா

காரைநகர், பண்டித்தாழ்வைச் சேர்ந்த கந்தையா நல்லையா (லொறிச்சாரதி) 22-06-92 அன்று காரைநகரில் சிவபதமடைந்து விட்டார். இவரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் அவரது இல்லத்தில் இடம் பெற்று, துக்க அனுஷ்டிப்பு அராலி வடக்கில் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள், அராலி வடக்கில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் இன்று (20-08-92) வியாழக்கிழமை நடைபெறுமென்பதை உற்றார், உறவினருக்கு அறியத் தருவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

பிரிவால் துயருறும்!

மகன்மார், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

[22224]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தாவடி, மானிப்பாய் வீதியில் பெரியவீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர் முத்திரைச்சந்தை. [சமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு] [22205]

### கரும்பு விற்பனைக்கு

நன்றாக முற்றிய நல்ல இனச் செங்கரும்பு விற்பனைக்கு உண்டு. வை. பேரம்பலம் தலையாளி, கொக்குவில். (5260)

### மில் விற்பனைக்கு

புதிய சைனா அலர், No 7 அலர், 12'' இறைண்டர் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. சபாநாதன், அரசடி வீதி, கரவெட்டி. (5256)

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [5237]

எமது நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற்றுக் கொள்வோருக்கும், கல்வி நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [22223]

### நல்லினத்தோடை

விளாத்தியில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன்தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. இடம்: துரைஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர் அல்லது இங்கிலீஷ் பார்மஸி, உரும்பராய். [4946]

### வெளிவந்துவிட்டது

நொடியும் விடையும் - பாகம் IV புதிய புத்தகம் - பரிசுப்போட்டி முடிவுகளுடன் எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ''கோப்பாய் சிவம்'' வெளியீடுகளை நல்லூர் உற்சவ காலத்தில் நல்லை ஆதீனம் - அஷ்டலக்ஷ்மியிலும், ஸ்ரீகாந்த புத்தகசாலையிலும் பெறலாம். பூந்தோட்டம் [சிறுவர் பாடல்கள்] பொறுக்கிய முத்துக்கள் [பொன்மொழித் தொகுப்பு.] [22214]

### தவறிவிட்டது

சின்னத்தம்பி சிவயோகராசா என்பவரது அடையாள அட்டையும், உணவு முத்திரையும், சிவயோகராசா குகநாதனின் உணவு முத்திரையும் மாமுனையில் 11-8-92 இல் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒப்படைக்கவும். [22231]

### ஜீவாகாரம்

குறைந்தசெலவில் நிறைவான உணவாகவும் போஷாக்கு குறையை நீக்கவும் பாவியுங்கள் ஜீவாகாரம். இதில் 100g. ஜீவாகாரத்தில் 17g. புரதமும் 400 கிலோ கலோரி சக்தியும் உண்டு. உங்கள் தேவைக்கு ஏற்ப தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அன்னா தொழிலகம், இணுவில். [3143]

### சோதிடம்

கல்வியில் சித்தியா, உத்தியோகம் கிடைக்குமா, வியாபாரம் சிறக்குமா, விவாகம் நடைபெறுமா ஜாதகக் குறிப்பு எழுதிப் பலன் அறியவும், கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு: தினமும் காலை 8 முதல் 12 வரை த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை: 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் பிற்பகல் 3 முதல் 6 வரை. [22175]

### A/L மாணவர்களுக்கு

இந்து நாகரிகம் இதழ்—6 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: க. சி. குலரத்தினம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி–3138]

### O/L கணிதம்

92 பரீட்சைக்கான மாதிரி வினாக்கள் மடிக்கை, சுட்டிகள் திரிகோணத்தில், எண் கணிதத்தில், வட்டத்தில், வரைபுகளிலும் B Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (22165)

விற்பனையாகின்றன!

**ஆண்டு — 5**

புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள்-விடையுடன்

கணிதம், தமிழ்

**BOND**

புத்தக நிலையம்,
58A, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
[சி-3146]

## கிறிஸ்த சேவ ஆச்சிரமம்

மருதனார்மடம் - சுன்னாகம்.

## 53ஆவது ஆண்டு விழா

(ஆவணி) ஆகஸ்ட் 21 வெள்ளிக்கிழமை 1992

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 7-00 மணி | பரிசுத்த நற்கருணை ஆராதனை |
| காலை | 9-00 மணி | தோத்திர ஆராதனை |
| மு. ப. | 11-00 மணி | கலந்துரையாடல் |
| ந. ப. | 12-00 மணி | மன்றாட்டு செபம் |
| பி. ப. | 3-30 மணி | பகிரங்கக் கூட்டம் |

இவ் விழாவிற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.
உங்கள் நண்பர்களையும்
அழைத்து வாருங்கள்.

வண. சேவக் சாம் T. அல்பிரட்
(சாம் அண்ணை)

[22163]

## 93 - A/L - MATHS
## பிரிவு - II

ஆரம்பம்: 22-08-1992
(1-00 — 3-00)

| PURE | APP. |
|---|---|
| ★ தொடர் | ★ வட்ட இயக்கம் |
| ★ வரிசை மாற்றம் சேர்மானம் | ★ எளிமை இசை இயக்கம் |
| ★ ஈருறுப்பு விரிவு | ★ சடத்துவ திருப்பம் |
| ★ சிக்கல் எண்கள் | ★ வகையீட்டு சமன்பாடு |
| ★ ஆகன் வரிப்படம் | ★ தடுக்கும் ஊடகங்களில் இயக்கம் |
| ★ புள்ளி விபரவியல் | ★ ஒரு தள விசைகள் |
| ★ நிகழ்தகவு | ★ நீர் நிலையியல் |

NEW MASTER INSTITUTE,
B.M.C LANE, JAFFNA. [சி-3150]

## Computer Programming in Basic Language

4 MONTHS

திங்கள், புதன், வகுப்புகள்

ஆரம்பம்: 26-08-1992
(10-30 மணி)

Lectures By: S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

I. A. B. [All Stages], எழுதுனர் சேவை, Short - Hand & Typing நடைபெறுகின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd. CROSS STREET,
JAFFNA.
[சி-3153]

# நாடாளுமன்றம் கனத்தை அல்ல! எம். பிக்களுக்கு சபாநாயகர் எச்சரிக்கை

'நாடாளுமன்றம் கனத்தை அல்ல, உறுப்பினர்கள் இங்கு அமைதியைப்பேண வேண்டும். அமைதியைக் கடைப்பிடிக்காது விட்டால் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி நான் ஆலோசிக்க வேண்டியிருக்கும்'

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் எம். பிக்களைப் பார்த்து இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் சபாநாயகர் எம். எச். முகம்மது. (ஒ-5)

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும்



### திருமதி தங்கரத்தினம் துரைராஜசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை)

அன்னையின் மடியில்: 14—06—1929
ஆண்டவன் அடியில்: 21—07—1992

எம்மை விட்டு அகன்று போன எமது அன்புத் தாயே! மாதம் ஒன்று போனாலும், நாம் விட்ட கண்ணீர் இன்னும் காயவில்லை. உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலா.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து வீட்டிற்கு வருகை தந்து, அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், 22-07-1992 இல் நல்லூர் யாக்கோபு சேமக்காலையில் நடைபெற்ற நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்டவர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், மற்றும் எமக்குப் பல வழிகளிலும் உதவிய உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (20-08-92) வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு கொக்குவில் பரிசுத்த திருத்துவ ஆலயத்தில் நிகழ இருக்கும் நினைவு அஞ்சலி ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

மாதிரி கோவிலடி,
கே.கே. எஸ். றோட்,
கொக்குவில். (22227)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 21 — 03 — 1930



உதிர்வு: 21 — 07 — 1992

அமரர்
### சுப்பையா தியாகராசா

பெற்று வளர்த்துப் பேணிக் காத்த
பெரும் தெய்வமே!
என்றும் எங்கள் மனதை விட்டு
அகலாத தந்தையே!
எங்கு தேடினும் கிடைத்திடாப்
பெரும் களஞ்சியமே!
எங்களுக்காய் வாழ்ந்த எங்கள்
அன்புத் தந்தையே!

எம் வாழ்விற்கு ஒளிவிளக்காய் நின்று, அன்புடன் வழிகாட்டி, பண்புடன் வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

113, சந்தன மாதா கோவில் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். [5263]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அபாயச் சமிக்ஞை

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலை அமைந்துள்ள பாதுகாப்பு வலயம் மீதும் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

படையினரின் 50 கலிபர் வேட்டுக்கள் பாதுகாப்பு வலயத்துக்குள் விழுந்து சில கட்டடங்களுக்குச் சிறு சேதங்களை விளைவித்துள்ளன.

அத்துடன் பாதுகாப்பு வலயத்துக்குள் நின்ற மக்களையும் இது கிலி கொண்டு ஓடவைத்தது.

வழமையாக யாழ். நகரத்தை அண்டிய பகுதிகளில் படையினர் இரவுநேர ஷெல் தாக்குதல் நடத்தும்போது பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்துக்குள் ஓடி அடைக்கலம் புகுவது உண்டு.

இம்முறை பாதுகாப்பு வலயத்துக்குள் நின்ற மக்களே ஓடிய சம்பவம், வரப்போகும் நாட்கள் குறித்து மக்களை மேலும் எச்சரிக்கும் பாணியில் அமைந்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

பாதுகாப்பு வலயத்துக்குள் ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதல் கண்டிக்கத்தக்க மனிதாபிமானமற்ற செயலாகும். இது செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறுகிறது.

பாதுகாப்பு வலயம் மீது ஸ்ரீலங்காப் படையினர் தாக்குதல் நடத்தியது இது முதலாவது தடவை அல்ல.

பாதுகாப்பு வலயம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அது அமுலுக்கு வந்த ஒரு சில தினங்களில் ஸ்ரீலங்கா விமானங்கள் பாதுகாப்பு வலயத்துக்குள் — அதுவும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மிகச் சமீபமாகக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி இருந்தன. அத்தாக்குதலின்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கும் சேதம் ஏற்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இச்சம்பவத்தைக் கண்டித்து ஏக காலத்தில் கொழும்பிலும் ஜெனிவாவிலும் அறிக்கை வெளியிட்டும் கூட ஸ்ரீலங்கா அரசு இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாக்குதல் நடத்தப்பட்டதை உத்தியோகபூர்வமாக மறுத்தும் இருந்தது.

இச்சம்பவத்துக்குப் பின்னரும் ஸ்ரீலங்காப் படையினரின் அத்துமீறல் சம்பவங்கள் தெரிந்தோ தெரியாமலோ பாதுகாப்பு வலயத்துக்குள் இடம் பெற்றிருந்தன.

ஆனால் கடந்த செவ்வாய் அன்று இடம்பெற்ற சம்பவம், முன்னைய குண்டுவீச்சுச் சம்பவத்தை ஒத்ததொன்று என்றே கூறவேண்டும்.

மண்டைதீவில் இருந்து பாதுகாப்புவலயத்தை நோக்கி படையினர் நேரடியாக வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர்.

ஸ்ரீலங்காப் படையினரோ அல்லது அரசினரோ தமது இலக்கை அதாவது இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாணும் இலக்கை அடைவதற்கு எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது. அவர்கள் எந்த ஒரு சர்வதேச ஒப்பந்தத்தையும் மீறத் தயாராக இருக்கின்றனர் என்றே தெரிகிறது.

ஏற்கனவே சேந்தான்குளத்தில் வாகனப் போக்குவரத்துத் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ஸ்ரீலங்காப் படையினர் மீறிவிட்டனர்.

தற்போது பாதுகாப்பு வலயத்தில் நடைபெறும் சம்பவங்களையும் நோக்கும்போது இந்த ஒப்பந்தமும் எவ்வளவு காலத்துக்கு ஸ்ரீலங்காப்படையினரால் மதிக்கப்படும் என்பது சந்தேகத்தை எழுப்புகிறது.

# கடந்த இரு மாதங்களும் அரச படைக்கு பேரிழப்பு!

கொழும்பு, ஆக. 20

யுத்தம் பற்றிய அரசாங்கத்தின் அணுகுமுறையில் பாரிய மாற்றம் தேவைப்படுகிறது.

— இப்படி அரசியல் பகுப்பாய்வாளர்கள் நம்புகின்றனர் என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

ஈழம் பிரச்சினைக்கு அரசியல் அல்லது இராணுவத் தீர்வுக்கான அரசியல் மற்றும் இராணுவத் தலைமைத்துவங்கள் தவறிவிட்டன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிப்பது மற்றும் போர் முனையில் யுத்த தளபாடங்களை இழப்பது ஆகியன வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு விரைவில் முடிவுகாண அரசாங்கத்தைத் தள்ளுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு மாதங்களும் படையினருக்கு மோசமான காலமாக இருந்தன.

இழப்புகளும் அதிகமாக இருந்தன. கொப்பேகடுவ உட்பட படைத் தளபதிகள் உயிரிழப்பதற்கு முன்னரே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி நூற்றுக்கணக்கில் படையினர் உயிரிழந்தனர் அதிகாரிகளுட்பட 19 படையினருடன் சினப் போர் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

இவ்வளவு அதிகமான இழப்பை நாம் தாங்கிக் கொள்ள முடியுமா? —இப்படி ஒருவர் கேட்டார்.

பாதுகாப்பு நிலவரம் பயங்கரமானதாகிவிட்டது என்று இன்னொருவர் சொன்னார்.

''நாட்டின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக விடுதலைப் புலிகள் மாறி வருகின்றனர். இதனை அரசாங்கம் தயக்கத்துடனாவது ஏற்கத்தான் வேண்டும்'' என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன.

— இவ்வாறு ஷமிந்திரா பெர்டினன்டோ தனது கண்ணோட்டத்தில் விவரித்துள்ளார். [உ-எ]

## புலிகளின் போருபாயங்கள் அதிசயிக்கத் தக்கவை!

### தெற்கு விமர்சகர் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 20

விடுதலைப் புலிகளின் போருபாயங்கள் அதிசயிக்கத்தக்க துணிச்சல் மிக்கவையாகவும், வெற்றிகரமானவையாகவும் உள்ளன.

—சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இவ்வாறு ஒப்புக்கொண்டார் என ''சண்டே ஐலண்ட்'' வார இதழில் அதன் அரசியல் விமர்சகர் தெரிவித்திருக்கிறார்.

''இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பகுதிகளில் சிரேஷ்ட படைத் தளபதிகள் ஒன்றாக பயணஞ் செய்திருக்கக் கூடாது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இனியும் எடுக்கத் தவறினால் இதுபோன்ற விளைவுகளை எதிர்பார்க்க முடியும்''—என்றும் அந்த அதிகாரி கூறினார்.

தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் முதலாவது பொலீஸ்காரரை (கான்ஸ்டபிள் கருணாநிதி) 14-2-1977 இல் இலங்கை இழந்தது. நான்கு ஆண்டுகள் கழித்து அக்டோபரில் யாழ்ப்பாணத்தில் முப்படைகளைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். ஈழம் யுத்தத்தில் ஜெனரல் ஒருவர் கொல்லப்படும் சாத்தியம் பற்றி அப்போது எவரும் எண்ணியிருக்க மாட்டார்கள் இருந்தும் அது நடந்துவிட்டது—இவ்வாறு அவர் தெரிவித்தார். [உ-எ]

## புலிகளின் உக்கிர தாக்குதல்: படைக்கு ஏற்பட்ட இழப்பு

### ஆங்கில வார இதழ் மதிப்பீடு

கொழும்பு, ஆக. 20

இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்னரும் அதற்குப் பின்னரும் படையினருக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களுக்கு இடையில் காணப்படும் பாரிய வித்தியாசம் விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதலுக்கு சிறந்த அளவுகோலாக உள்ளது.

—பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' வார இதழில் ஷமிந்திரா பெர்டினன்டோ எழுதிய ஆய்வு ஒன்றில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''14 - 2 - 1977 முதல் 6-8-1987 வரை இலங்கைப் பாதுகாப்புப் படையினர், அதிகாரிகள் உட்பட 693 பேரை இழந்தனர். அவர்களில் 26 அதிகாரிகள் உட்பட 622 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். 34 கடற்படையினரும் 25 விமானப்படையினரும் கொல்லப்பட்டனர். அக்காலகட்டத்தில் காயமடைந்த பொலீஸார் மற்றும் படையினரின் எண்ணிக்கை ஆயிரம் என்று காட்டப்பட்டது. ''ஈழம் யுத்தம் — 1'' இல் கொல்லப்பட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரியாக கேர்ணல் ஆரியப்பெருமா இருந்தார். அது 1985 இல் இடம் பெற்றது.

''கடந்த இரண்டு ஆண்டுகளில் யுத்தம், விபத்துக்கள் மற்றும் விவரிக்க முடியாத சூழ் நிலைகளில் அதிகாரிகள் உட்பட 3 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். காயமடைந்த படையினரின் எண்ணிக்கை 8 ஆயிரம் என்ற உச்சத்தை அடைந்துள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்த படையினரில் 300 பேர்வரையில் அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்—என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 20

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் — 18 ஆம் திருவிழாவான இன்று — வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் [மாலையில்] — யசோதா — செல்லராசாவின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் [மாலையில்] — கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''இரணியன் போர்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப் பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2-00 மணிக்கு — கந்தபுராணப் படிப்பு, பிற்பகல் 3-00 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள் தொடர் விரிவுரை. [இ-30]

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 20

கொக்குவில் கலைக் கோவில் அமரகலா நாட்டியாலயம் அளிக்கும் 15 ஆவது ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகள் இன்று வியாழன் பிற்பகல் 4-00 மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா பிரதமவிருந்தினராகவும் யாழ். கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. சி. கிட்டு கௌரவவிருந்தினராகவும் விழாவில் கலந்து கொள்கின்றனர். [இ]

## கலந்துரையாடல்

1990 - 91 கல்வி ஆண்டில் பல்கலைக் கழகங்களில் பல்வேறு கற்கை நெறிகளில் கற்பதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 'கெல்ற்' [Gelt] ஆங்கில வகுப்புகளை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளி காலை 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

1990 - 91 கல்வி ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுப்பட்ட கடிதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள். அந்தக் கடிதத்துடன் கலந்துரையாடலில் பங்குகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

சென்ற ஆண்டில் 'கெல்ற்' கல்வி இணைப்பாளராக கடமையாற்றியவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. [இ-5]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 20

ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ கிறீன் - கிங்ஸ் அணி எதிர் ஞானபாஸ்கரோதயா அணி

★ விக்கினேஸ்வரா 'ஏ' அணி எதிர் திருமலை நீலம் அணி [த]

# சிறிமா தலைமையை ஏற்றால்தான் எதிர்கட்சி முன்னணியில் இடம்

கொழும்பு, ஆக. 20

எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணியில் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவின் தலைமையை ஏற்காதவர்களைக் கட்சிகளைச் சேர்த்துக் கொள்வதில்லை என்று முடிவாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் அவரது றோஸ் மீட் பிளேஸ் இல்லத்தில் நடந்த கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அக்கூட்டத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, வை. பி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி மற்றும் டி. ஜே. வி. பி. ஆகிய கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இம்முடிவால், நவசமசமாஜக் கட்சி எதிர்க் கட்சி கூட்டு முன்னணியில் சேரமுடியாத நிலை உருவாகியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இம்முடிவின் படி, திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவின் தலைமையை ஏற்பது குறித்த தமது நிலையை திட்ட வட்டமாக விளக்க வேண்டிய நெருக்கடி லலித் குழுவினரின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினருக்கு ஏற்பட்டுள்ளது. [உ-எ]

## ஆகஸ்ட்-28 கூட்டத்திற்கு யார் தலைமை வகிப்பது?

### எதிரணிக்குள் இழுபறி


கொழும்பு, ஆக. 20

ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை கொண்டுவந்த ஓராண்டு நிறைவு தினத்தை நினைவு கூரும் வகையில் ஆகஸ்ட் 28 ஆம் திகதி நடத்தப்படவுள்ள பொதுக் கூட்டத்திற்கு யார் தலைமை வகிப்பது? — இந்த விடயத்தில் லலித் குழுவினரின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான திரு. ஏ. சி. குணரத்தினா தலைமை வகிக்க வேண்டும் என்று அந்த முன்னணியினர் வலியுறுத்துகின்றனர் என்றும் —

சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா தான் கூட்டத்துக்கு தலைமை வகிக்க வேண்டும் என்று ஏனைய எதிர்க்கட்சிகள் வாதாடுகின்றன என்றும் 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையைக் கொண்டுவருவதற்குத் தேவையான பலத்த ஆதரவை சுதந்திரக் கட்சியே வழங்கியது என்று ஏனைய எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. [உ-எ]

## வழிகாட்ட வாவா!

முடிவிலாப் பொருளே முருகா! மக்கள்
மிகப்படும் துயரினை நீ அறியாயோ? அதற்கு
முடிவொன்று வேண்டும்! மாலவன் மருகா!
மாநகர் நல்லை முதல்வனாய் விளங்கும்
வடிவேலா! வள்ளிதெய் வானையர் மணாளா!
வீரனே சூரனை வென்று அமரர்
விடிவினுக்கு அருள்செய்த வித்தகா எங்கட்கு
வழியது காட்ட வாவா வல்லவா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திரவியப்பிள்ளை கந்தையா

(உரும்பராய் வடக்கு)

உரும்பராய் வடக்கு, திரு வீதியைச் சேர்ந்த திருமதி திரவியப்பிள்ளை கந்தையா நேற்றுப் புதன் காலை காலமானார்.

இவர் உரும்பராய் வடக்கு காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும் மலாயன் பென்சனருமான அமரர் கைதடி இளைய தம்பி கந்தையா அவர்களின் அன்புப் பாரியாரும், பாக்கியப்பிள்ளை, காலஞ் சென்றவர்களான சிவஞானம், செல்வஞானம், யோகம்மா, தங்கரத்தினம் என்பவர்களின் சகோதரியும், கமலாஜனி, பரமேஸ்வரன் (இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர், புத்தளம்), விங்காஜனி, விமலாஜனி, மகேஸ்வரன் (எக்ஸ்றே - லண்டன்), பத்மாஜனி (வைத்தியர் லண்டன்), யோகேஸ்வரன் (ஆய்வு கூட உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்). திவ்வியஜனி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தாயாரும், வ. தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய புகையிரதப் பகுதி உத்தியோகத்தர், சங்கத்தானை), கமலாதேவி, எஸ். கந்தப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், வைத்தீஸ்வர வித்தியாலயம்), ரூபா, மங்களாதேவி (ஆசிரியை உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்). ந. சற்குணநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், பிரேமகுமாரி (கொழும்பு), அஜந்தா (புத்தளம்), காண்டீபன் (கொழும்பு). இமயாழினி, இபன், அர்ச்சனா, தஷி, அபி ஆகியோரின் ஆசைப் பாட்டியுமாவார்.

உரும்பராய் வடக்கு, திருவீதி, 'ஆனந்த பவனம்' இல்லத்தில் இன்று [20-08-92] வியாழன் முற்பகல் 9-00 மணியளவில் அன்னவரின் மரணச் சடங்குகள் நடைபெற்று, தகனக்கிரியையின் பொருட்டு உரும்பராய் வடக்கு இருவன் மயானத்திற்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகிறோம்.

தகவல்:
க. யோகேஸ்வரன் [மகன்],
வ. தாமோதரம்பிள்ளை [மருமகன்],

'ஆனந்த பவனம்',
திருவீதி,
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். [22232]

## கந்தையா குமாரசாமி

(முன்னாள் நல்லூர் சந்தை குத்தகையாளர்)

திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதியைச் சேர்ந்த முன்னாள் நல்லூர் சந்தை குத்தகையாளரும் பிரபல வியாபாரியுமான கந்தையா குமாரசாமி காலமானார். அன்னார் காலம் சென்ற சின்னம்மாவின் அன்புக்கணவரும், தெய்வநாயகி, நாகபூசணி சிவநாயகி, வசந்தாதேவி, சண்முகராசா, பரராசசிங்கம், சிறிகுலசிங்கம், காலம் சென்ற குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம் சென்ற விநாசித்தம்பி, ஆறுமுகசாமி, கந்தசாமி. சிவசுப்பிரமணியம், கமலாம்பிகை, கமலாதேவி, சிவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலம் சென்ற ஆறுமுகம் காலம் சென்ற காசிப்பிள்ளை— (முன்னாள் சந்தை குத்தகையாளர், ஐயாத்துரை) கதிரவேலு சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், வி ஸ்ரீஸ்கந்தராசா, வி. திருமுருகானந்தன், திருமதி செல்வநாயகி நடராசா, வி. ஸ்ரீராமச்சந்திரன். வி. செந்தில்நாதன், வி. சிவகுமார், வி. கிஷ்ணமோகன், ஆ. உதயகுமார், ஆ. மீனலோசனி, ஆ. மீனாம்பிகை, ஆ விஜகுமார், திருமதி தவநாயகி தர்மலிங்கம், க. சாந்தநாயகி, க. சிவகந்தரூபன் [பொறியியல்துறை மாணவன், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி], க வசந்தநாயகி, சி சுஜீத்தா, ப சைலஜா, ப. சுஜா, ப. சரண்ராஜ் ச சுதாமதி, ச. அகிலன், சி ராஜன், சி ராஜி, சி. ராகுலன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை காலை 9-30 மணிக்கு செங்குந்தா வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. தங்கராஜா
(மகன்)

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி, கிழக்கு. (22237)

## திருமதி சகுந்தலா சிவகுமாரு

திருமதி சகுந்தலா சிவகுமாரு 09 - 08 - 1992ல் டுபாயில் காலமானார். இவர் திரு. சிவகுமாரு அவர்களின் அன்பு மனைவியும், கச்சேரி கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த திரு. திருமதி தர்மலிங்கத்தின் அன்பு மகளும், கோண்டாவில் மேற்கு நவரட்ணராஜா வீதியைச் சேர்ந்த திரு திருமதி திருநாவுக்கரசுவின் மருமகளும், திருமதி திலகமதி சிவகுமாரனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [13 - 08 - 1992] வியாழக்கிழமை களத்தை மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. சிவபாலன்
[மக்கள் வங்கி, ஸ்ராலி வீதி]

நவரட்ணராஜா றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [...]

# இலங்கை அணியிடம் மண்கவ்வும் நிலையில் ஆஸி!

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் நடை பெற்று வரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மூன்றாம் நாளான நேற்று இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் விளாசித்தள்ளினர்.

இலங்கைத் தரப்பில் மூன்று செஞ்சரிகள் [சதங்கள்] அடிக்கப்பட்டன.

ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையான 256 க்குப் பதிலாக துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணி நேற்று எட்டு விக்கெட் இழப்புக்கு 547 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதல் இன்னிங்ஸை நிறுத்திக் கொண்டது;

ரொமேஷ் களுவிதாரண ஆட்டமிழக்காமல் - 132, அஸங்க குருசிங்க - 137, இலங்கை அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்க - 127 ஓட்டங்களைப் பெற்றனர்.

நேற்று ஆட்ட நேரம் முடிவுற்றபோது ஆஸி அணி விக்கெட் இழப்பின்றி 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்று ஆட்டத்தின் ஓய்வு நாளாகும். (உ)

## மிதி வெடி

யாழ்ப்பாணம், ஆக. 20

கடற்றொழிலுக்குச் சென்றவர் கரையில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கினார். இதனால் இவரது வலது கால் முழங்காலுக்குக் கீழே துண்டிக்கப்பட்டது.

கிழக்கு அரியாலை கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

பாஷையூரைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை தவம் [வயது 26] என்பவரே காலை இழந்தவர் ஆவார். [இ-15]

# "ஜெனரல் கொப்பர் இறந்து விட்டார்!"

## தமிழ்க் குழுத் தலைவர் கவலை

கொழும்பு, ஆக. 20

கடந்த 8 ஆம் திகதி – லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ மற்றும் தளபதிகள் கண்ணி வெடியில் உயிரிழந்த அன்று— தமிழ்க்குழு ஒன்றின் தலைவரைச் சந்தித்தேன்; அவர் சொன்னார்— "கொப்பர் இறந்து விட்டார்."

—இப்படி "சண்டே ஐலண்ட்" பத்திரிகையில் தராகி எழுதிய அரசியல் விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"அப்பா" என்பதை நாட்டுப்புறப் பாஷையில் "கொப்பர்" என்றழைப்பது போலத்தான் ஜெனரல் கொப்பர் என்று கொப்பேகடுவ அடிக்கடி அழைக்கப்பட்டு வந்தார்.

'கொப்பர்' இறந்துவிட்டார் என்று கூறிய அந்தக் குழுத் தலைவர் பின்னர் ஏதோ நினைத்தார். தனது நெற்றியில் தனது கையை வைத்தார். வெறும் நம்பிக்கையற்ற நிலையில் "யுத்தம் முடிந்து விட்டது"— என்று உரத்துச் சொன்னார்.

"இந்த மனிதர் இன்றி நாம் என்ன செய்யப்போகின்றோம்?"— என்றும் அவர் கூறினார்.

என்ன நடந்தது என்பது பற்றிய மேல் விவரங்களை அவரிடமிருந்து நான் பெறுவதற்கு முன்னர், அவர் அவசரமாக புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

தெற்கில் கொப்பேகடுவுக்கு புகழ் ஏற்படுவதற்கு முன்னர் அவரின் பெயர் தமிழர் குழுக்களுக்குப் பரிச்சயமானதாகி விட்டது.

'தராகி'யின் விமர்சனத்தில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

### வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

வடக்கு, கிழக்கு கடற்பகுதியில் புலிகள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாதவாறு கடற்படை பலப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னான்டோ குறிப்பிட்டார்.

நடந்து முடிந்த சண்டையுடன் பார்க்கும் போது எஞ்சியிருப்பது சிறிய சண்டைதான். தொடர்ச்சியான வான் தாக்குதல் மூலம் அதனையும் முடித்து விடுவோம் என விமானப்படைத் தளபதி எயார்வைஸ் மார்ஷல் டெறன்ஸ்குணவர்த்தனா தெரிவித்தார். [உ-10]

### யுத்தத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கில் 20 லட்சம் குடும்பங்கள் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அப்பிரதேசங்களில் அபிவிருத்தி, சுகாதாரம் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன

1991 ஜனவரி தொடக்கம் ஜூலை வரையில் அகதிகளுக்காக 203 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும், இக்காலப் பகுதியில் யுத்தம் காரணமாக, இப்பிரதேசங்களில் விளைவிக்கப்படும் சுமார் பதின் மூன்றரை லட்சம் மெட்ரிக் தொன் தானியங்கள் நாசமடைந்துள்ளன —இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

### பத்திரிகையாளர்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யான அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம்—

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு றிச்சர்ட் டி சொய்ஸா என்ற பிரபல பத்திரிகையாளர் தலையிலே சுடப்பட்டு பிணமாக வீசப்பட்டிருந்த சம்பவம் போன்றவற்றுக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க பொறுத்திருந்து பார்த்த செய்தியாளர்கள் இறுதியில் நேற்றைய மறியற் போராட்டத்தில் குதித்தனர் என்று பி. பி. ஸி. தெரிவித்தது [உ-5]

### வடக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவ அதிகாரிகள் விரிவாக ஆலோசனை நடத்தி முடிவு செய்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்களுக்குள் யுத்தத்தை வெற்றியுடன் முடிக்கக் கூடிய தான நடவடிக்கைகளுக்கு டென்ஸில் கொப்பேகடுவ ஆயத்தம் செய்துள்ளார் என்றும்—

விடுதலைப் புலிகள் மீது கடும் தாக்குதலைத் தீவிரப்படுத்தி யாழ் குடாநாட்டின் பிரதான நகரங்கள் அனைத்தையும் இன்னும் சில மாதங்களில் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று இராணுவம் நம்புவதாகவும் இராணுவ உயரதிகாரி ஒருவர் சொன்னார்.

[...] மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா நவரத்தினம்

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னர் திருநெல்வேலியிலும், பின்னர் உருத்திரபுரத்திலும் வசித்தவருமான சுப்பையா நவரத்தினம் 17 ஆம் திகதி காலமானார்.

இவர் சுப்பையா செல்லாச்சியின் அன்பு மகனும், ராஜலக்ஷ்மியின் அன்புக் கணவரும், ராஜபூபதி, ராஜரவீந்திரன், ராஜகுலேந்திரன், ராஜசிலோசனா, ராஜநாயகி, ராஜசேகரன், ராஜேஸ்வரி, ராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாரத்தினம், வைகுந்தகுமரன், ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கம்மாவின் அன்பு மருமகனும், கௌதமி, ஜெனார்த்தனி, ஜெனனி, ஜெனனன் பிரசன்னா, வைஷ்ணவன் ஆகியோரின் அன்பு பேரனாரும், காலஞ்சென்ற நடராசா, சிவஞானசுந்தரம், அன்னரத்தினம், ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் திருநெல்வேலி வளாக வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
குலம், ராஜன்
(மகன்மார்)

வளாக வீதி,
திருநெல்வேலி. [22241]

## திருமதி றெஜினா தங்கம்மா மார்ட்டீன்

திருமதி றெஜினா தங்கம்மா மார்ட்டீன் காலமானார். இவர் காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் யேக்கப்பிள்ளை மார்ட்டீன் அவர்களின் அன்பு மனைவியும், சகுந்தலா சேவியர், எம். ஏ. ஆர். செல்வநாயகம் [மதுவரி பரிசோதகர், வவுனியா]. நிர்மலா பிறிடி, எம். துரைநாயகம் [ஈழநாடு], எம். மதுரநாயகம், கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆர். எல். சேவியர் [சுகாதார பரிசோதகர், யாழ். பல்கலைக்கழகம்], புஸ்பா, எம். பிறிடி, செல்வதி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற எம். எம். அலெக்சாண்டர் [மட்டக்களப்பு], திருமதி புளோ யோசவ், திருமதி பூவாலூயிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், எக்ஸ். ஏ ரஜீந்திரகுமார், சுகந்தி கரேஸ், சுனீத்தா, சாமினி, சுதர்ஷிணி, நிலாந்தினி, ஜயந்தன், ஜயந்தா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் [20-8-92] இன்று பி. ப 3-30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மா. துரைநாயகம்
(மகன்)

181, ஆஸ்பத்திரி வீதி,
ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம். [22240]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2' இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org